RAMCO
SUPERGRADE
Engineered for Concrete

# சிமென்ட்டின் வகைகளும் அவற்றின் பயன்பாடுகளும்

## சிமென்ட்டின் பயன்பாடுகள்:

சிமென்ட்டின் வகைகள் குறித்து சென்ற இதழில் தெரிவித்திருந்தோம். எந்த அடிப்படையில் சிமென்ட்டின் வகையை தேர்ந்தெடுக்கவேண்டும்? என்பது குறித்தும், சிமென்ட்டின் பயன்பாடுகள் குறித்தும் இனி காண்போம்.

கட்டுமானம், கட்டுமான வடிவமைப்பு, கட்டுமான முறை, நிலத்தின் தன்மை, நிலத்தடி நீரின் தன்மை, தட்ப வெட்ப நிலை, காற்றின் ஈரப்பதம், சுற்றுப்புறச் சூழல், நிலத்தடி நீர் மற்றும் காற்றில் கலந்துள்ள ரசாயனங்கள், கட்டிடத்தின் வாழ்நாள் போன்ற பல்வேறு காரணக்கூறுகளை கருத்தில் கொண்டே சிமென்ட்டின் வகை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

போர்ட்லேன்ட் பொசலோனா சிமென்ட் (PPC), ஆர்டினரி போர்ட்லேன்ட் சிமென்ட் (OPC), ஒயிட் போர்ட்லேன்ட் சிமென்ட் ஆகியவை சந்தையில் பரவலாக கிடைக்கின்றது. மற்ற சிமென்ட் வகைகள், நுகர்வோரின் தேவை மற்றும் அளவைப் பொருத்து பிரத்யேகமாக தயாரித்து தரப்படுகிறது. உயரிய தொழில்நுட்பத் திறன் வாய்ந்த 'தி ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனம்', அனைத்து வகையான சிமென்ட்டுகளையும் நுகர்வோரின் தேவைக்கேற்ப தயாரித்து வழங்கும் தொழில்நுட்ப வசதியை கொண்டிருக்கிறது.




போர்ட்லேன்ட் பொசலோனா சிமென்ட், ஆர்டினரி போர்ட்லேன்ட் சிமென்ட், ராபிட் ஹார்டனிங் போர்ட்லேன்ட் சிமென்ட், சல்பேட் ரெசிஸ்டிங் போர்ட்லேன்ட் சிமென்ட், ஒயிட் போர்ட்லேன்ட் சிமென்ட் ஆகியவற்றின் பயன்பாடுகளை இனி காண்போம்.

தொடரும்